# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 04.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். CP 3768/SCIC/2022</u>

திரு. R.சுதாகரன் — மனுதாரர்
2-C,பாட்டை தெரு
ஆபத்தாரணபுரம்
வடலூர் - 607 303
கடலூர் மாவட்டம்.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மேற்பார்வையாளர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
எண்.34, தமிழ் முத்து நகர்
கோண்டூர், கடலூர் - 607 001. .... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 13/02/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

***ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 20/05/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம் அவர்கள் அம்மனுவை ஒரு மாதம் கடந்து அதாவது 20/06/2022 தேதியிட்டு கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், 07/12/2022 தேதியிட்டுத்தான் பொது தகவல் அலுவலர், கடலூர் மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு உரிய தகவல்களை அனுப்பியுள்ளார். ஆணையத்தின் காணொளி காட்சி***

*வாயிலான விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் கலந்து கொள்ளவில்லை.*



*மேலும், மனுதாரரிடமிருந்து 20/05/2022 தேதியிட்டு பிரிவு 6(1)-ன் கீழான மனுவை பிரிவு 6(3)-ன் கீழ் உரிய காலக் கெடுவிற்குள் (ஐந்து நாட்களுக்குள்) அனுப்பாததற்கு அப்போதைய (20/05/2022 தேதிய) பொது தகவல் அலுவலர் திரு.R. ராஜாமான்சிங் (தற்போது மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி மாவட்டம்) அவர்கள் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொது தகவல் அலுவலர்/மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் பெற்று 26/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

*அதேபோன்று மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பிரிவு 6(3)-ன் கீழ் 20/06/2022 தேதியில் கிடைக்கப் பெற்றும், அம்மனுவிற்கு உரிய காலக் கெடுவிற்குள் (ஒரு மாத காலத்திற்குள்) மனுதாரருக்கு தகவல் வழங்காமல், 07/12/2022 தேதியிட்டுத்தான் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளார். எனவே, மிகவும் காலதாமதமாக தகவல் வழங்கியதற்கு அப்போதைய (20/06/2022 தேதிய) பொது தகவல் அலுவலர் திருமதி மலர்க்கொடி (தற்போது மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் மாவட்டம்) அவர்கள் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொது தகவல் அலுவலர்/ மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம் பெற்று 26/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

2.மேற்குறிப்பிட்டவாறு திருமதி அ.விஜயலட்சுமி, மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் 26/03/2025-க்கு பதிலாக, 28/03/2025 அன்று ஆஜராகி, திரு.ராஜாமான்சிங், மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம் தற்போது திருச்சி மாவட்டம் மற்றும் திருமதி.மலர்க்கொடி, மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் தற்போது திருவாரூர் மாவட்டம் ஆகியோரிடமிருந்து பெற்ற காரண விளக்கங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. மேற்கண்டவாறு திரு.ராஜாமான்சிங், மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம் தற்போது திருச்சி மாவட்டம் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கங்களை ஆணையம் பரிசீலனை செய்து, அதனை ஏற்கிறது. ஆணையத்தின் மேல்நடவடிக்கை கை விடப்படுகிறது.

4. மேற்கண்டவாறு திருமதி. மலர்க்கொடி, மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் தற்போது திருவாரூர் மாவட்டம் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கங்களை ஆணையம் பரிசீலனை செய்து, அதனை ஏற்கிறது. ஆணையத்தின் மேல்நடவடிக்கை கை விடப்படுகிறது. இத்துடன் இந்த புகார் மனு வழக்கு மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ.்.தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

**உதவி பதிவாளர்**



## வழக்கு எண். CP 3768/SCIC/2022

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
மேற்பார்வையாளர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
எண்.34, தமிழ் முத்து நகர்
கோண்டூர், கடலூர் - 607 001.

2. பொதுத் தகவல் அலுவலர்/
மேற்பார்வையாளர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
விழுப்புரம் மாவட்டம்

3.திரு.ஆர். ராஜாமான்சிங்
(முன்னாள் பொது தகவல் அலுவலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விழுப்புரம் மாவட்டம்)
தற்போது திருச்சி மாவட்டம்.

4.திருமதி மலர்க்கொடி
(முன்னாள் பொது தகவல் அலுவலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்)
தற்போது திருவாரூர் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு. R.சுதாகரன்
2-C,பாட்டை தெரு
ஆபத்தாரணபுரம்
வடலூர் - 607 303
கடலூர் மாவட்டம்.

நகல்

1.இயக்குநர்
நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரகம்
CMDA Complex, E & C Market Road,
Koyambedu, CHENNAI-600 107.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்

சென்னை-600 035 (for follow up)
RG/PC